
MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only







அனைத்து புனிதர்கள் தினம்

நவம்பர் 01

Printed Matter

To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



கூதோஸ் ஈத்தோ ஞாயிறு

நவம்பர் 03

மலர் 21 நவம்பர் 2024 இதழ் 11

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.11.2024 | Friday | | | Ramapuram |
| 02.11.2024 | | 5.00 pm | Cathedral Construction Finance Committee Meeting | |
| 03.11.2024 | Sunday | 2.00 pm<br>4.00 pm | MCYM Day Celebration<br>Feast Mass | Mariagiri<br>Urambu |
| 04.11.2024 | Monday | 9.00 am<br>11.00 am | Major Seminary<br>Marriage | Trivandrum<br>Mannanthala |
| 05.11.2024 | Tuesday | 9.00 am | Major Seminary | Trivandrum |
| 06.11.2024 | Wednesday | 9.00 am | Major Seminary | Trivandrum |
| 08.11.2024 | Friday | 9.00 am | Major Seminary | Trivandrum |
| 09.11.2024 | Saturday | 9.00 am | Major Seminary | Trivandrum |
| 11.11.2024 | Monday | 9.00 am | Major Seminary | Trivandrum |
| 12.11.2024 | Tuesday | 6.30 am<br>9.00 am | Mass<br>Major Seminary | Catholicate Centre<br>Trivandrum |
| 13.11.2024 | Wednesday | | Major Seminary | Trivandrum |
| 14.11.2024 | Thursday | 9.30 am<br>4.30 pm | Homily<br>Jubilee Mass | Nagercoil<br>Nadaikavu |
| 15.11.2024 | Friday | 8.00 am | Seminar | Coimbatore |
| 17.11.2024 | Sunday | 9.30 am | Feast Mass | Nadaikavu |
| 18.11.2024 | Monday | 9.00 am | Major Seminary | Trivandrum |
| 19.11.2024 | Tuesday | 9.00 am | Major Seminary | Trivandrum |
| 20.11.2024 | Wednesday | 10.00 am | Meeting Commission Secretaries | Bishop's House |
| 21.11.2024 | Thursday | 9.30 am<br>4.30 pm | School Day<br>School Day | Chellamkonam<br>Palavilai |
| 24.11.2024 | Sunday | 7.00 am<br>8.30 am<br>2.30 pm | Hall Blessing<br>Feast Mass<br>Christ the King Celebration | Charoor<br>Marthandam Cathedral |
| 27.11.2024 | Wednesday | 3.30 pm | School Day | Mariagiri |
| 28.11.2024 | Thursday | 2.00 pm | School Day | Sooriacode |
| 30.11.2024 | Saturday | 6.00 pm | Feast Mass | Vimalapuram |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 21 நவம்பர் 2024 இதழ். 11


***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Cover Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*




மலர். 21 அக்டோபர் 2024 இதழ். 10

Address :
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail : mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the Diocese of Marthandam





மலர். 21 நவம்பர் 2024 இதழ் 11

## முக்கியமான நாட்கள்

நவம்பர் 2024

| | |
|---|---|
| 1 | அனைத்து புனிதர்களின் தினம், உலக சைவ தினம் |
| 02 | அனைத்து ஆன்மாக்களின் தினம் |
| 05 | உலக சுனாமி விழிப்புணர்வு தினம் |
| 7 | தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம், குழந்தை பாதுகாப்பு தினம் |
| 09 | தேசிய சட்ட சேவைகள் தினம் |
| 10 | உலக பொது போக்குவரத்து தினம், உலக நோய்த்தடுப்பு நாள் |
| 11 | தேசிய கல்வி தினம் |
| 13 | உலக கருணை தினம் |
| 14 | குழந்தைகள் தினம் |
| 16 | தேசிய பத்திரிகை தினம், சர்வதேச சகிப்புத்தன்மை தினம் |
| 17 | சர்வதேச மாணவர் தினம் |
| 18 | தேசிய இயற்கை மருத்துவ தினம் |
| 19 | சர்வதேச ஆண்கள் தினம் |
| 20 | உலக குழந்தைகள் தினம் |
| 21 | தேசிய உலக தத்துவ தினம், உலக தொலைக்காட்சி தினம் |
| 25 | பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் |
| 26 | இந்திய அரசியலமைப்பு தினம் |

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | Circulars | 3-8 |
| 2. | குருமடச் செய்திகள் | 9 |
| 3. | குருக்களின் தியானம் | 9 |
| 4. | மறைமாவட்ட சிறப்பு ஜெபமாலை பவனி | 10 |
| 5. | மறைபரப்பு தளச் செய்திகள் | 11 |
| 6. | மேரி மக்கள் துறவற சபை | 12 |
| 7. | MIDS | 13 |
| 8. | MCYM | 16 |
| 9. | MCA | 17 |
| 10. | Health for One Million (HOM) | 18 |
| 11. | கொமித்சியச் செய்திகள் | 20 |
| 12. | பெயர்விழா நல்வாழ்த்துக்கள் | 21 |
| 13. | HOM - Special School for the Mentally Retarded | 22 |
| 14. | மறைவட்ட செய்திகள் | 24 |
| 15. | திருமண ஆயத்தப்பயிற்சி | 27 |
| 16. | ஆயரின் அக்டோபர் மாத நிகழ்வுகள் | 28 |
| 17. | இம்மாதம் நினைவு கூர | 31 |
| 19. | Bishop's Diary | 32 |


*Printed by*
**Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852**



மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை

# இளையோர் தினச்செய்தி - 2024

*மேதகு ஆயர்களே, குருக்களே, இருபால் துறவிகளே, அன்பு இறைமக்களே, என் அன்பிக்கினிய இளம் நெஞ்சங்களே,*

இளமையில் கிறிஸ்துவின் மனநிலையில் வளர்ந்து திருச்சபைக்கும் உலகிற்கும் ஓர் ஆசீராக மாறிய புனித பிரான்சிஸ் அசிசியின் திருவிழாவை மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை இளையோர் தினமாக கொண்டாடி மகிழ்கிறது. நமது திருச்சபையில் இந்த ஆண்டு இளையோர் தினத்தை 2024 அக்டோபர் மாதம் 6-ஆம் நாள் கொண்டாடுகிறோம். இளையோர் தினத்தை உகந்த தயாரிப்புடன் கொண்டாட திருச்சபை அழைப்பு விடுக்கிறது. நமது திருச்சபையின் மக்கள் அனைவருக்கும் குறிப்பாக இளையோர்களுக்கு இளையோர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். MCYM இயக்கத்தின் விண்ணக பாதுகாவலராகிய புனித பிரான்சிஸ் அசிசியை போல மற்றொரு கிறிஸ்துவாக மாற இந்நாள் அனைத்து இளையோர்களுக்கும் உத்வேகம் ஊட்டட்டும் என வேண்டுகிறேன்.

## இளையோர்களும் நம்பிக்கை பயிற்சியும்

இன்றைய இளையோர்களின் வாழ்வை ஆய்வு செய்யும் போது இரண்டு மண்டலங்கள் நம்மை அச்சுறுத்துகின்றன. 1. இளையோர்களின் இடம் பெயர்தல், 2. நம்பிக்கையின்மை. உயர் கல்விக்காவும் வேலை வாய்ப்புகளுக்காகவும் கிராமங்களை விட்டு பட்டணங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் கடந்து செல்லும் இளைஞர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கி எடுத்துச் செல்லும் வளங்களை பகிர்ந்து கொள்வதில் இருக்கும் ஏற்ற தாழ்வுகளே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலம் பெயர்தலுக்கு தூண்டுகிறது என்பது ஒரு உண்மை. பிறந்த நாட்டிலும் கல்வி கற்ற இடங்களிலும் எதிர் காலத்தை குறித்த தெளிவின்மை இளைஞர்களின் மனதில் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மக்கள் தலைவர்கள் மிக அவசரமாக கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, உலக நாடுகள் தங்கள்

உறவுகளுக்கு வலுவூட்டி, வளர்ச்சியில் எல்லா நாடுகளும் பங்கேற்கின்ற செயல்பாட்டு முறையை உலக அளவில் உருவாக்க வேண்டும். தனிப்பட்ட அரசியல் சிந்தனைகளும் மத வாதங்களும் உலகளாவிய சகோதரத்துவத்திற்கு பாதை அமைக்க வேண்டியது இன்றைய தேவை என உலக நாடுகள் சிந்தித்து செயல்பட்டால் இப்பிரச்சனைக்கு நல்ல முடிவை காண முடியும். இளையோர்கள் மத்தியில் பரவலாக்கம் பெற்றிருக்கின்ற பகுத்தறிவு வாதமும் உலகு சார்ந்த எண்ணங்களும் இந்த புதிய தலைமுறையை நம்பிக்கையின்மைக்கு இழுத்து செல்கிறது என்பது உண்மையே. ஐம்புலன்களுக்கு புலப்படுபவற்றை மட்டும் நம்புவதற்கான எண்ணம் புரிதலுக்கு அப்பாற்பட்ட உண்மைகளை மறுக்கின்ற மனநிலைக்கு இளையோர்களை தூண்டுகிறது. உலகு சார்ந்த மனநிலையை பரவலாக்கம் செய்யும் சித்தாந்தங்களும் இயக்கங்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இளையோர்களின் மனதில் பதிவாகி விடுகின்றன. செழிப்பு தத்துவம் (Philosophy of Prosperity) மனித வாழ்வை மாண்புடையதாக்குகின்ற அன்பு, அமைதி, மகிழ்ச்சி போன்ற புனித செயல்களையும் உண்மை, நீதி போன்ற அறநெறிகளையும் அதன் விழுமிய அர்த்தத்தில் விளக்குவதில்லை. புலன் அறிவே சரியான ஞானம் என்றும், புலன்களுக்கு கிடைக்கும் மகிழ்ச்சியே உண்மையான மகிழ்ச்சி என்றும் இவர்கள் தவறுதலாக புரிந்து கொள்கின்றனர். நிலையான வாழ்வும் நிலையான உண்மைகளும் இவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டது. இத்தகைய எண்ணங்களின் தாக்கத்துக்கு உட்பட்டு வாழும் இளையோர்களுக்கு கடவுளால் படைக்கப்பட்ட மனிதனை உடலும், உள்ளமும், ஆன்மாவும் உள்ள ஒரு நபராக கண்டு ஏற்றுக்கொள்வதும் அன்பு செய்வதும் இயலாத காரியமாக அமைகிறது. வாழ்வின் உலகுசார் தளம் உலகத்தையும் ஆன்மீக தளத்தையும் மறுத்தால் மனிதனை அவனது முழுமையில் புரிந்து கொள்ள இயலாது.

இறைமனித உறவு உருவாக வேண்டுமானால் மனித வாழ்வை நாம் அதன் முழுமையில் வாழ வேண்டும். மனித வாழ்வின் முழுமையை மனிதரான கிறிஸ்து உலகிற்கு வெளிப்படுத்தினார். வணக்கத்திற்குரிய மார்



இவானியோஸ் ஆண்டகையின் அறிவுரை இங்கே குறிப்பிடத்தக்கது. "உடலும் ஆன்மாவும் உள்ள பாவிகளாகிய நம்மை கடவுளோடு இணைக்க கடவுள் உருவாக்கிய ஒரே வழி ஆன்மாவும் உடலும் உள்ள பாவமாசற்ற மெசியாவே. எனவே, கடவுளை அடைய நம் உடலையும் ஆன்மாவையும் மெசியாவின் ஆன்மாவுடனும் உடலுடனும் இணைத்துக் கொள்ள வேண்டும்" (அருளடையாள திருத்தொண்டரின் மறையுரை - பக் 36-37). எனவே இளையோர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு கிறிஸ்து மற்றும் திருச்சபை மைய பயிற்சி இளையோர்களுக்கு இன்றியமையாதது என திருச்சபை கற்பிக்கிறது.

MCYM ஒரு சமூக சேவை இயக்கம் அல்ல அது திருச்சபையின் அதிகாரபூர்வமான நம்பிக்கை பயிற்சிக்கான இயக்கம். எனவே MCYM செயல்பாடுகள் இளையோரின் நம்பிக்கை பயிற்சிக்கு எவ்வளவு உதவுகின்றது என்பதை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும். நம்பிக்கை வாழ்வு திருச்சபையில் தான் மேற்கொள்ளப்படுகிறது. இளையோர் இயக்கத்தில் ஈடுபடுவோர் இளையோர்களை திருச்சபையுடன் இணைத்து நிறுத்தி நம்பிக்கை குறித்த உறுதிப்பாடும் நம்பிக்கை வளர்ச்சியும் இளையோர் பணியில் முக்கிய இடத்தைப் பெற வேண்டும். இளமையின் வலிமையும் வலுவின்மையும் அறிந்தவர்களாய் கிறிஸ்தவ எதிர்நோக்கில் வேரூன்றி திருச்சபை மக்களுள் எவரும் அகன்று நிற்காதபடி காலத்திற்கேற்ற பயிற்சிகளை அறிமுகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு பங்கிலும் இளையோர்களுக்கும் பெரியோர்களுக்கும் இடையே ஆரோக்கியமான உரையாடல் உருவாக பங்கு பேரவை, பங்கு உறுப்பினர்கள், மறைத்தூதுப் பணியாளர்கள் முயற்சி செய்ய வேண்டும். தனிப்பட்ட விருப்பங்களுக்கு மாறாக திருச்சபை காட்டும் இளையோர் பணியை செயல்முறைப்படுத்த அனைவரும் முயற்சிக்க வேண்டும். நம் திருச்சபை எடுக்கும் அணுகுமுறை புறக்கணிக்கும் அணுகுமுறை (exclusive) அல்ல மாறாக இணைத்துச் செல்லும் அணுகுமுறை (inclusive).

## மறுவொன்றிப்பு நூற்றாண்டு விழா தயாரிப்பு

1930 செப்டம்பர் 20-ஆம் நாள் நடந்த மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவுக்கான தயாரிப்பில் மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை நுழைந்துள்ளது. ஒரு திருத்தூதுவத் திருச்சபையாகிய இத்திருச்சபை தன்னை புதிதாக்கம் செய்து மறுஅர்ப்பணம் செய்ய ஆயத்தமாகிறது. தயாரிப்பின் முதல் வருடம் ''இறைவார்த்தை ஆண்டாக'' அனுசரிக்கப்படுகிறது. "என் வார்த்தையில் நிலைத்திருங்கள்" (யோவா 17:7) என்னும் இலக்கு வாக்கை ஏற்று இறைவார்த்தையை கற்று அறிந்து அனுபவமாக்கிக் கொள்ள முயற்சிக்கிறோம். இறைவார்த்தையை ஒரு தியானச் சூழலில் அணுகுவது அவசியம். "இறைவார்த்தை வாசிப்பை இறைவேண்டல் பின்தொடர்ந்து வர வேண்டும்" (DV 25). ஜெப உணர்வுடன் இறைவனின் குரலை கேட்க நம் இதயங்களை ஆயத்தம் செய்வோம். அவ்வாறே இளமையின் தடுமாறிய வழிகளில் இறைவார்த்தை ஒளியாக இருந்து இளையோருக்கு திசை காட்டுகிறது. இறைவார்த்தையை வாழ்வின் திசைகாட்டியாக ஏற்றுக்கொள்ள இளையோர்கள் தயாராக வேண்டும்.

## இறைவார்த்தையை வாழ்வாக்கும் இளையோர்

இறைவார்த்தை வாசிப்பதற்காக அல்ல வாழ்வாக்குவதற்கான ஒன்று. நம்பிக்கை வாழ்வின் அடிப்படை இறைவார்த்தை. நமது ஆன்மீக வாழ்வின் ஊற்றும் அதுவே. திருச்சபையோ இறைவார்த்தையை தனது செல்வமாக கருதி அடுத்த தலைமுறைக்கு பகிர்ந்து கொடுக்கிறது. காலத்தின் அடையாளங்களை அறிந்து அதன் பொருளை இறைமக்களுக்கு பகிர்ந்தளிக்கிறது. எனவே, இறைவார்த்தைக்கு தனிப்பட்ட விருப்பங்களுக்கேற்ப விளக்கம் அளித்து அறிவித்தலாகாது. "இறைவார்த்தை நம் ஒவ்வொருவருக்குமாக தரப்படுகிறது. ஆனால் அதே வேளையில் அதே இறைவார்த்தை இந்த சமூகத்தை உருவாக்கம் செய்கிறது. திருச்சபையை கட்டி எழுப்புகிறது. எனவே, திருச்சபையின் உறவு ஒன்றிப்பில் திருவிவிலியத்தை அணுக வேண்டும்" (VD 86). குழுமமாக இறைவார்த்தையை கற்றறிந்தால் தோழமை உணர்வு வலுப்பெறும். இவ்வாறு இறைவார்த்தையை வாழ ஒவ்வொருவரும் தயாராக வேண்டும்.



மறைநூலை ஜெப உணர்வுடன் தியான வாசிப்பு செய்ய மிகச்சிறந்த சூழல் திருவழிபாடே. சிறப்பாக திருப்பலி" (VD 86). ஞாயிற்றுகிழமைகளில் இறைவார்த்தையை கேட்டு அதனை ஆழத்தில் கற்றறிந்து ஆழ்மன தியானத்திற்கு உட்படுத்தி செயல்பாடுகளுக்கு வடிவம் கொடுக்க வேண்டும். இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு முன்வைக்கப்படும் செயல்திட்டங்களில் இளையோர்கள் மிகுந்த கவனமுடன் பங்கேற்க வேண்டும் என்று அன்புடன் நினைவூட்டுகின்றேன். இறைவார்த்தை பற்றி எரியும் தீயாக ஆன்மாவில் நிலைகொள்ள வேண்டும். புனித பிரான்சிஸ் அசிசி, புனித பிரான்சிஸ் சேவியர் போன்றோர் தங்கள் இளமைப் பருவத்தில் இறைவார்த்தையை ஆழ்மன தியானம் செய்ய தொடங்கினர். அது அவர்கள் வாழ்வை மட்டுமல்ல, அவர்கள் வாழ்ந்த சுற்றுச்சூழலையும் உலகத்தையும் மாற்றி அமைத்தது என்பது உலகறிந்த உண்மை. வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் வாழ்வை மாற்றி அமைத்ததும் இறைவார்த்தையே. அவருடைய இறைவார்த்தை தியானம் திருச்சபையை புதிதாக்கம் செய்யவும் மறைதூதுப் பணியை மேற்கொள்ளவும் உத்வேகவும் தூண்டுதலும் கொடுத்தது. தளர்ந்து போகும் சூழல்களில் இறைவார்த்தையை இளையோர்கள் இதயங்களில் எழுதி வைத்தால் அவர்கள் எதிர்நோக்கின் ஒளிக்கதிர்களை பகிர்கின்றனர். தினமும் மாற்றம் கண்டுக்கொண்டிருக்கும் வாழ்க்கை சூழலை இறைவார்த்தையின் ஒளியால் ஆய்ந்தறிந்து எதிர்நோக்கு மனநிலையில் அணுக நம் இளையோர்களுக்கு இயல வேண்டும். இறைவார்த்தையை இதயத்தில் பதிவு செய்யும் இளைஞர்களுக்கு இறைவார்த்தையை மையமாக கொண்ட செயல்பாடுகளை மேற்கொள்ள முடியும். இறைவார்த்தையை தங்கள் இதயங்களில் பதிவு செய்து நடக்கும் இளையோர்கள் எதிர்நோக்கின் ஒளிக்கதிர்களாக மாறுகின்றனர். இளைய நெஞ்சங்களிடமிருந்து நாம் எதிர்பார்ப்பதும் இதுவே. இளைய நெஞ்சங்கள் இறைவார்த்தையை இதயத்தில் தாங்கி திருச்சபையின் புதுப்பித்தலிலும் புனிதப்படுத்துதலிலும் பங்கேற்க வேண்டுமென்று அனைவருக்கும் அன்புடன் அழைப்பு விடுக்கின்றேன்.

2024 அக்டோபர் 6-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பங்கு, மறைவட்டம், மறைமாவட்டம் போன்ற தளங்களில் தகுந்த நிகழ்வுகள் ஒழுங்குப்படுத்தி இளையோர் தினத்தை கொண்டாட வேண்டும் என்று நினைவூட்டுகின்றேன். இளையோர்கள் அனைவரும் ஒப்புரவு அருளடையாளம் பெற்று தேவநற்கருணை பெற்றுக்கொள்ள வேண்டும். பங்கு குடும்பங்கள் இணைந்து பொது நிகழ்வுகள் ஒழுங்குப்படுத்த வேண்டும். இந்நாளில் சேகரிக்கப்படும் சிறப்புக் காணிக்கை திருச்சபையின் இளையோர் பணிக்கானது என்பதை நீங்கள் அறிந்ததே. சேகரிக்கப்படும் காணிக்கையை மறைமாவட்ட நிதி அலுவலகத்தில் ஒப்படைக்கவும். இவ்வாறு சேகரிக்கப்படும் காணிக்கை 50% மறைமாவட்ட இளையோர் பணிக்கும் 50% சபை அளவிலான இளையோர் பணிக்கும் பயன்படுத்தப்படும். எனவே காணிக்கையின் 50% பட்டம் காதோலிக்கேட் மையத்தில் செயல்படும் உயர் பேராயர் கூரியா அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு மறைமாவட்ட நிதி காப்பாளரை அறிவுறுத்துகிறேன்.

சபை அளவிலான இளையோர் தின கொண்டாட்டத்தை 2024 அக்டோபர் 19,20 தியதிகளில் திருவல்லா மறைமாவட்டம் பொறுப்பேற்று நடத்துகிறது. திருவல்லா பேராலய வாளாகத்தில் வைத்து நடைபெறும் இந்நிகழ்வில் திருப்பலி, வினாடி வினா, கலைநிகழ்ச்சிகள், வகுப்புக்கள், பொதுக்கூட்டம், இளையோர் பேரணி போன்ற நிகழ்வுகள் நடைபெறும். இந்த இளையோர் தின நிகழ்விற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

அனைவருக்கும் இறையாசீர் உரித்தாகுக.

*இவண்,*

**✝ மேதகு ஆயர் மாத்தியூஸ் மார் போளிகார்ப்போஸ்**
திருவனந்தபுரம் அதிஉயர் மறைமாவட்ட துணை ஆயர் &
ஆயர் மாமன்ற இளையோர் பணிக்குழு தலைவர்

20-09-2024
காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்



# குருமடச் செய்திகள்

- அருட் சகோதரர்களுக்கான வருடாந்திர தியானமானது அக்டோபர் மாதம் 9-ஆம் தேதி துவங்கி 13-ஆம் தேதி வரை நடைபெற்றது. தியானத்தின் ஆரம்பமாக மேதகு ஆயர் அவர்கள் குருமடத்திற்க்கு வருகை தந்து தியானத்திற்க்கான வழிக்காட்டுதல்களை வழங்கினார். இந்த ஐந்து நாள் தியானத்தை அருட்தந்தை ஜோஸ் பாறவிளை தலைமையேற்று நடத்தினார்.
- அக்டோபர் மாதம் 20-ஆம் தேதி அன்று நடைபெற்ற நல்லாதானபுரம் புதிய ஆலய அடிக்கல் நாட்டுதல் விழாவில் அருட்சகோதரர்கள் பக்தியோடு கலந்து கொண்டனர்.

# குருக்களின் தியானம்

இம்மாத குருக்களுக்கான மாதாந்திர தியானம் 08.10.2024 அன்று காலை 9 மணிக்கு மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இம்மாத தியானத்தை பேரருட்தந்தை மரிய மார்ட்டின் அவர்கள் வழி நடத்தினார்கள். இம்மாதாந்திர தியானத்தில் மறைமாவட்டத்திலுள்ள அருட்தந்தையர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**நவம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 15, 16 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# மறைமாவட்ட சிறப்பு ஜெபமாலை பவனி

மரியாயின் சேனை சார்பில் நடைபெற்ற மறைமாவட்ட அளவிலான சிறப்பு ஜெபமாலை பவனியானது 20.10.2024 அன்று தோட்டவாரம் புனித அந்தோணியார் குருசடியிலிருந்து சேனை ஆரம்ப ஜெபத்தோடு ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து, பேரருட்தந்தை மரிய அற்புதம் அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினார். தோட்டவாரம் பங்கின் பங்குதந்தை அவர்களின சிறப்பு ஜெபத்தோடு ஜெபமாலை பவனியானது ஆரம்பமானது. பவனியில் இறைமக்கள், அருள்தந்தையர்களோடும், அருள்கன்னியர் களோடும் இணைந்து ஜெபமாலையை கரங்களில் ஏந்தி ஜெபித்தவாறு சாரூர் இயேசுவின் திருஇருதய ஆலயத்தை வந்தடைந்தனர். சேனை சங்கிலி ஜெபத்தை தொடர்ந்து, மறைமாவட்ட குருகுல முதல்வர் Msgr. ஜோஸ் பிரைட் அவர்கள் நிறைவுரை வழங்கினர்கள். நற்கருனை ஆசீர் வழங்கப்பட்ட பின் பேரருள்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். பின் சேனை இறுதிஜெபம் ஜெபிக்கப்பட்டு திருப்பவனி நிகழ்வுகள் நிறைவடைந்தன. இத்திருப்பவனியில் அருள்தந்தையர்கள், அருள்கன்னியர்கள் மற்றும் ஏராளமான இறைமக்களும் கலந்து கொண்டனர் . இத்திருபவனிக்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட கொமித்சிய ஆன்ம இயக்குநர் பேரருட்தந்தை மைக்கில் முக்கம்பாலத் அவர்களுக்கு நன்றிகள்.



# மறைபரப்பு தளச் செய்திகள்

❖ **களக்காடு** - நல்லநாதபுரத்தில் புதிதாக கட்டியெழுப்பப்பட்ட Mini Health Centre மற்றும் பங்குத்தந்தை இல்லத்தை மேதகு ஆயர் அவர்கள் 20-10-2024 அன்று அர்சித்து அருளினார். தொடர்ந்து புது ஆலயத்திற்கான அடிக்கலை நாட்டினார்.

❖ **வேலாம்பூர் - விருதுநகர்** - மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியில் நடைபெறும் மறைபரப்பு மற்றும் மேய்ப்புபணிகளை ஒருங்கிணைக்கும் விதமாக விருதுநகரில் அமையவிருக்கும் கட்டிடத்திற்கான அடிக்கல்லை 11.10.2021 அன்று மேதகு ஆயர் அடிகல் நாட்டினார்கள்.

❖ **தேவதானப்பட்டி**

i) MCYM மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்க தினம் சிறப்பிக்கப்பட்ட அக்டோபர் 4-ம் தேதி அன்று தேவதானப்பட்டி மறைபரப்புதளத்தில் இளையோர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

ii) **தாய்மார் சங்கம் (MCMF)** - 'தாய்' வழியாய் குடும்பங்களை வலுப்படுத்தும் விதமாய் தேவதானப்பட்டி மறைபரப்புத்தளத்தில் தாய்மார் சங்கம் 17.10.2024 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இதில் 30-ற்கும் மேற்பட்ட தாய்மார்கள் கலந்துகொண்டனர். எல்லா வியாழக்கிழமைகளிலும் இரவு 7.15 மணிக்கு தாய்மார் சங்க கூடுகை அருட்சகோதரிகளின் தலைமையில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

iii) **கைத்தறி தொழில் மையம்** - 'Fighting the poverty with the Job' என்னும் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் தேவதானப்பட்டி மறைபரப்பு தளத்தில் செயல்படும் சுய உதவி குழுக்களின் உறுப்பினர்களின் வேலையில்லா நிலையை அகற்ற கைத்தறி நிலையம் மேதகு ஆயர் அவர்களின் ஆசியுடன் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

# மேரி மக்கள் துறவற சபை

## நாம விழா கொண்டாட்டம்

மேரி மக்கள் துறவற சபையின் சூசையப்பர் மாகாண தலைமை அருள் சகோதரியான மதர் ரோஸ் பிரான்சிஸ் DM அவர்களின் நாம விழாவானது புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழாவை ஒட்டி 14.10.2024 திங்கள்கிழமை காலை 11 மணிக்கு சிறப்பு ஜெபமும் அதனைத் தொடர்ந்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அருட்சகோதரி அவர்களுக்கு ஆயர் அவர்கள், அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் அனைவரும் நாமவிழா வாழ்த்துக்களை தெரிவித்தனர். புனிதர் வழியாக இன்னும் இறையாசீர் பெற்று வாழ வாழ்த்துகிறோம், ஜெபிக்கிறோம்.

## நினைவு அஞ்சலிகள்!



அருட் சகோதரி
லீனா டி எம் (80)

மேரி மக்கள் துறவற சபையில் புனித சூசையப்பர் மாகாண உறுப்பினரான அருட்சகோதரி லீனா டி.எம் (80) இறைவனடி சேர்ந்தார். பாலா மறைமாவட்டம் வடக்கேல் வீட்டில் காலம் சென்ற திரு. ஜோசப் திருமதி ஏலி தம்பதியினரின் இரண்டாவது மகள். இவரின் கல்லறை அடக்கம் 03.10.2024 வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்கள் மகாண இல்ல கல்லறை தோட்டத்தில் நடைபெற்றது. இவர் கிராத்தூர், ஆல்வா, பனிச்சமூடு, சென்னை, மார்த்தாண்டம், வெண்ணியூர், பொங்கமூடு, அம்பாசமுத்திரம், வீரவநல்லூர், இடயங்குளம், மத்தியாஸ் நகர் போன்ற மடங்களில் துறவற இல்ல தலைவியாகவும் மறைபரப்பு பணியாளராகவும், சமுக சேவையின் ஒருங்கிணைப்பாளாராகவும் இருந்து செயல்பட்டார்கள். இவரின் உடன் பிறந்தோர், திரு சேவியர், திருமதி. பீனா மாத்யூ, திருமதி. ராஜம்மா ஜோய், திருமதி. ரோசிலின் மாத்யூ ஆகியோர் ஆவர்.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## கோல்பிங் பொதுக்குழு கூட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட கோல்பிங் இயக்கத்தின் 2024-ம் வருடத்திற்கான பொதுக்குழு கூட்டமானது 05.10.2024 அன்று காலை 10 மணிக்கு மறைமாவட்ட கோல்பிங் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்டசெயற்குழு தலைவர் திரு. சசன்குமார்அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். தொடர்ந்து எட்டு கூட்டமைப்புகளிலும் உள்ளஅறிக்கைகள் அந்தந்த கூட்டமைப்பு செயலர்களால் வாசிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. அத்துடன் மறைமாவட்ட அறிக்கையும் வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் பொதுக்குழுவின் நோக்கத்தையும், கோல்பிங் இயக்கத்தின் நான்கு தத்துவங்களை மையமாகக் கொண்டு கோல்பிங் குடும்ப பொறுப்பாளர்கள் செயல்பட வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார்கள். அருட்தந்தை சிபி அவர்கள் இறைவார்த்தைவழி கோல்பிங் இயக்க வாழ்வுமுறை குறித்து தியானம் நடத்தினார்கள். தொடர்ந்து மறைமாவட்ட கோல்பிங் இயக்கத்தின் வளர்ச்சிக்கான வழிமுறைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. பின்னர் மறைமாவட்ட பொருளர் திருமதி. சுகந்தி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. இக்கூட்டத்தில் கோல்பிங் குடும்பங்களின் தலைவர், செயலர், பொருளர் என மொத்தம் 245 பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. சஜிக்குமார் மற்றும் ஆனிமேட்டர்களால் சிறப்பான முறையில் செய்யப்பட்டிருந்தது.

## உதவித்திட்டங்கள்

1. 16.10.2024 அன்று நாகர்கோவில் பணிமண்டலத்தின் 10 சுய உதவி குழுக்களில் உள்ள 40 சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு விருட்சம் கடன் உதவிதிட்டத்தின் வழியாக ரூபாய் 20,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

## பிறநிகழ்வுகள்

1. 29.09.2024 அன்று மதியம் 2.30 மணி முதல் 3.30 மணிவரை மிட்ஸ் அலுவலகம், ஆற்றூர், பெருவிளை மற்றும் மரியகிரி ஆகிய பகுதிகளில் வைத்து மிட்ஸ் அறிவு திறன் தேர்வு நடத்தப்பட்டது. இந்த தேர்வினை தளிர்கள் உலகம் திட்டபயனாளிகள் 149 பேர் எழுதினர்.

2. இயற்கை விவசாயத்தை மேம்படுத்தும் விதமாக 23.09.2024 முதல் 17.10.2024 வரை மேக்கோடு, சூரியகோடு, மார்த்தாண்டம், நடைக்காவு, செல்லங்கோணம், பனச்சமூடு, கிராத்தூர், ஆற்றூர் மற்றும் தச்சூர்கோணம் ஆகிய பகுதிகளில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் காய்கறி தோட்டம் அமைப்பது குறித்த பயிற்சி நடத்தப்பட்டது. மேலும் அப்பயிற்சியில் கலந்துகொண்ட நபர்களுக்கு காய்கறி விதைகளும் வழங்கப்பட்டது.

3. 30.09.2024 அன்று மிட்ஸ் எழுவோம் இயக்கம் சார்பாக புற்றுநோய் எதிர்ப்பு தின திட்டமிடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பிப்ரவரி 04, 2025 -ல் வரவிருக்கும் புற்றுநோய் எதிர்ப்பு தினத்தை எவ்வாறு அனுசரிப்பது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம், முக்கிய தன்னார்வலர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

4. 04.10.2024 அன்று மதியம் 2.30 மணிக்கு விண்ணைத் தொடு திட்டத்தின் Champions meeting மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இந்த கூட்டத்தில் திட்டத்தின் முன்னோக்கிய



செயல்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம், அருட்பணியாளர்கள் மற்றும் பங்குகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட Champians இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

5. 07.10.2024 முதல் 09.10.2024 வரை கொடைக்கானல் வைத்து விண்ணைத்தொடு திட்டத்தின் வருடாந்தர ஆய்வு கூட்டம் நடைபெற்றது. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் விண்ணைத்தொடு திட்டத்தின் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

6. 11.10.2024 அன்று காலை 9.30 மணி முதல் 3 மணி வரை தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன. மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஆரோக்கியம், சைபர் குற்றங்கள், மாணவர்கள் பெற்றோரிடம் மறைக்கும் செயல்கள் மற்றும் அவற்றை கண்டறியும் யுக்திகள் ஆகியவை குறித்த பயிற்சி வழக்கறிஞர் திரு. ஆன்றஸ் ஜெறோம் அவர்களால் வழங்கப்பட்டது. இந்த பயிற்சியில் 75 மாணவ மாணவிகளும், 58 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

7. 12.10.2024 அன்று காலை 10.30 மணிக்கு தளிர்கள் உலகம் திட்டத்தின் முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்து நடத்தும் ஆஸ்தி அமைப்பின் கூட்டமானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இந்த கூடுகையில் மொத்தம் 9 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# MCYM
## Youth Apostolate

94-வது மறுவொன்றிப்பு தினமானது செப்டம்பர் 19, 20 ஆகிய நாட்களில் பாறசாலை மறைமாவட்டம் வெங்கனூர் என்ற இடத்தில் நடைபெற்றது. அதில் நம்முடைய மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் இளையோர்கள் சுமார் 100 பேர் கலந்து கொண்டனர். அவர்கள் மறுஒன்றிப்பு மாநாட்டிலும், திருப்பலியிலும் கலந்து கொண்டனர்.

**எழுத்து போட்டிகள்**

MCYM ஆண்டு திட்டத்தில் தீர்மானித்தப்படி செப்டம்பர் மாதம் 22-ம் தேதி M.J.K.M. மேல் நிலைப்பள்ளியில் வைத்து இளையோர்களுக்கான எழுத்து போட்டிகள் நடத்தப்பட்டது.

**ஓவியம் வரைதல்**

I - பரிசு - அஸ்வின் ஜோயல் - செருப்பாலூர்
II - பரிசு - ஐஸ்வர்யா - கோயிக்கல்தோப்பு
III - பரிசு - பிபிஷியா - தேமானூர்

**கட்டுரை எழுதுதல்**

I - பரிசு - ரமிஷா - மார்த்தாண்டம்
II - பரிசு - அனக்யா இன்பான்டன்ட் - விமலபுரம்
III - பரிசு - பியூட்டிலின் ஷைனி - அணக்கரை

**வினாடி – வினா**

I - செருப்பாலூர் II - மாத்தூர்கோணம் III - அணக்கரை

**இளையோர் இயக்க தினவிழா**

அக்டோபர் மாதம் 4-ம் தேதி புனித பிரான்சிஸ் அசிசியின் நினைவையொட்டி அக்டோபர் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தங்களுடைய அலகுகளில் இளையோர் இயக்க தினவிழாவை சிறப்பித்தனர்.



அக்டோபர் மாதம் 19, 20-ம் தேதிகளில் சபை அளவிலான இளையோர் இயக்க தினவிழா (HESED - 2K24) திருவல்லா மறைமாவட்டத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. நம்முடைய இளையோர்கள் சுமார் 40 பேர் இதில் களந்து கொண்டார்கள். சபை அளவில் நடத்தப்பட்ட வினாடி வினா போட்டியில் நம்முடைய மார்த்தாண்டம் மறைமாவட்டம் இரண்டாம் பரிசு பெற்றது. அடுத்த ஆண்டு நம்முடைய மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் வைத்து (HESED - 2K25) -ல் சபை அளவிலான இளையோர் இயக்கம் தினவிழா கொண்டாடப்படுகிறது.

# MCA
## Diocese of Marthandam

- மார்த்தாண்டம் மறை மாவட்ட MCA சார்பில் அக்டோபர் மாதத்தில் குலசேகரம் மறைவட்ட MCA அலகுகளை சந்திக்கத் திட்டமிடப்பட்டது. அதன்படி 06/10/2024 அன்று சாரூர் மற்றும் மாத்தார் அலகுகளையும், 13/10/2024 அன்று அணக்கரை மற்றும் முதலார் ஆகிய அலகுகளையும் மறைமாவட்ட MCA பொறுப்பாளர்கள் சந்தித்து, கலந்துரையாடி, புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்து தொடர்ந்து சிறப்பாக செயல்பட வழிகாட்டுதல்கள் வழங்கினர்கள். இதுவரையும் சந்திக்கப்படாத அலகுகளையும் இம்மாதத்திற்குள்ளாகவே சந்தித்து அதன் செயல்பாடுகள் ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது

## HEALTH FOR ONE MILLION (HOM)

### Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் நலவாழ்வு சங்கத்தின் (DioceseHealthAssociation) துவக்க நாள் 24.9.2024 அன்று HOM அலுவலகத்தில் வைத்து அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. Catholic Health Association of Tamil Nadu செயலர் அருட்சகோதரி ஷைனி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு இவ்வமைப்பை துவக்கி வைத்து DHA பணிகள் குறித்து எடுத்துரைத்தார்கள். இக்கூட்டததில் MMM உறுப்பினர்கள் திரு. ஜாண், திரு. பால்ராஜ், திரு. அருள்தாஸ், கிராத்தூர் மருத்துவமனை மருத்துவர் திரு. செல்வ சந்திரன் மற்றும் HOM பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

HOM ஆர்கனைசர்களின் மாதாந்திர ஆலோசனை கூட்டம் 09.10.2024 அன்று HOM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நடைபெற்றது. திருமதி லதாஅவர்கள் அறிக்கை வாசித்தார்கள். திருமதி செல்வி அவர்கள் வரவுசெலவு கணக்கு வாசித்தார்கள். அருட்தந்தை அஜீஷ் குமார்அவர்கள் ஒவ்வொருவரின் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். பின்னர் HOM குழுக்களை மேம்படுத்துவது குறித்தும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மருத்துவ முகாம்கள் மற்றும் நோய்விழிப்புணர்வு கூட்டம் நடத்துவதுகுறித்தும் தீர்மானிக்கப்பட்டது.

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் நலவாழ்வு சங்கத்தின் (DioceseHealth Association DHA) கூட்டம் 14.10.2024 அன்று HOM அலுவலகத்தில் வைத்து அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நடைபெற்றது. DHA செயலர்



அருட்சகோதரி லின்ஸி தெரேஸ், அருட்சகோதரி அஞ்சனா மற்றும் MMM உறுப்பினர்கள் திரு. ஜாண், திரு. பால்ராஜ், திரு. அருள்தாஸ் மற்றும் அருட்சகோதரி பிரான்சிலெட், அருட்சகோதரி ஜிஷா ஜோண், அருட்சகோதரி ஷெர்லி ஜோண் மற்றும் HOM Palliative செவிலியர்கள் மற்றும் HOM பணியாளர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் DHA சார்பாக நவம்பர் 14-ம் தியதி உலக சர்க்கரை நோய் தினத்தை முன்னிட்டு பிலாங்காலை EMMAUS-ல் வைத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும் உலக கழிப்பறை தினத்தை முன்னிட்டு SHALOM இல்லத்தில் வைத்து விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. டிசம்பர் 1-ம் தியதி சூசைபுரம் MSC ஆலயத்தில் வைத்து உலக AIDS தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும் டிசம்பர் 3-ம் தியதி உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு குழித்துறை HOM சிறப்புப் பள்ளியில் வைத்து நிகழ்ச்சிகள் நடத்தவும் தீர்மானிக்கப் பட்டது. இறுதியில் திரு. பால்ராஜ் அவர்கள் நன்றி கூறினார்கள்.

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் சார்பாக பேதுருவின் கரங்கள் என்னும் மாதாந்திர மருத்துவ உதவித் திட்டம் செயல்பட்டு வருகிறது. தற்போது 40 நிரந்தர நோயாளிகளுக்கு மாதம் 1,000/- ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் மாதத்திற்குரிய உதவித்தொகை 21.10.2024 அன்று HOM அலுவலக வளாகத்தில் வைத்து அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்களால் வழங்கப்பட்டது.

மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் வழியாக செயல்படும் மருத்துவ உதவித் திட்டத்தின்படி மண்டைக்காட்டைச் சார்ந்த கணேஷ் என்ற Cancer நோயாளியின் Chemotherapy சிகிட்சைக்கு ரூ. 10,000/- வழங்கப்பட்டது.

### மரியாயின் சேனை

# கொமித்சியச் செய்திகள்

✦ கொல்லங்கோடு மற்றும் களியக்காவிளை மறைவட்டங்கள் இணைந்து நடத்திய கருத்தரங்கானது 22-09-2024 அன்று நடைக்காவு கிறிஸ்து அரசர் தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது. மரியாயின் சேனை சார்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் Br. ஜேம்ஸ் மைக்கிள் அவர்கள் நற்கருணை ஓர் வானக உணவு' என்ற கருத்தை மையமாக வைத்து தியான உரை வழங்கினார்கள். நடைக்காவு கியூரியாவின் ஆன்ம இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். கொமித்சிய ஆன்ம இயக்குநர் அருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் அவர்கள் நற்கருணை ஆராதனையை தலைமை ஏற்று வழிநடத்தினார்கள். சேனை இறுதி ஜெபத்துடன் 4:30 மணி அளவில் நிறைவுபெற்ற இக்கருத்தரங்கில் 150-க்கு மேற்பட்ட சேனையர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கருத்தரங்கு ஏற்பாடுகளை முன்னின்று ஒழுங்குபடுத்திய நடைக்காவு பங்கின் சேனையாளர்களுக்கு கொகித்சியம் சார்பில் நன்றிகள்.

✦ செருப்பாலூர் பங்கில் செயல்படாமல் இருந்த மூன்று பிரசீடியங்கள், மிகச் சிறந்த முறையில் செயல்படுவதற்கு காரணமான செருப்பாலூர் கியூரியாவின் ஆன்ம இயக்குநர் அருட்தந்தை பிபின் கிராத்தூர் அவர்களுக்கு கொமித்சியம் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.



# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை இராபின்சன்
நவம்பர் 01



அருட்தந்தை சதீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை பென்னட்
நவம்பர் 01



அருட்தந்தை அஜீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை வினு குமார்
நவம்பர் 01



அருட்தந்தை ஹெபின்
நவம்பர் 01



அருட்தந்தை சஜின்
நவம்பர் 01



அருட்தந்தை சுனீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை ஜெனிற்றோ
நவம்பர் 01

# HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

**ஹோம் – சிறப்புப்பள்ளியில் சட்ட விழிப்புணர்வு முகாம்**

**வட்ட சட்ட பணிகள் குழுத்தலைவர் தலைமை தாங்கினார்**

குழித்துறை, ஹோம் அறிவுசார் குறைபாடுடையோருக்கான சிறப்புப்பள்ளியில் 18.10.2024 அன்று சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. முகாமிற்கு குழித்துறை ஒருங்கிணைந்த நீதிமன்ற வட்ட சட்ட பணிக்குழு தலைவர் தாங்கினார். வருகை தந்த நீதிபதிகளை சிறப்புக் குழந்தைகள் பேண்ட் வாத்தியம் முழங்க வரவேற்றார்கள். தொடர்ந்து ஹோம் சிறப்புப்பள்ளியின் 25 ஆண்டு கால வரலாறு அடங்கிய காணொளி காண்பிக்கப்பட்டது. சிறப்புக் குழந்தைகள் நடனமாடி அனைவரையும் மகிழ்வித்தார்கள். தொடர்ந்து ஹோம் சிறப்புப்பள்ளியின் இயக்குநர் தாளாளர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் அறிமுகயுரையுடன் அனைவரையும் வரவேற்றார்கள். குழித்துறை, ஒருங்கிணைந்த நீதிமன்ற சார்பு நீதிபதியும் வட்ட சட்ட பணிகள் குழுத்தலைவருமான மாண்புமிகு நீதிபதி திருமதி சுந்தரி அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார்கள். அவர் தம் தலைமையுரையில் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் நிலை நாட்டுவதில் நீதிமன்றமும், வட்ட சட்ட பணிகள் குழுவும் என்றும் உறுதுணையாக இருக்கும். மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள், கடமைகள், அரசு நலத்திட்டங்கள் மற்றும் பாதுகாப்பிற்கு எவ்வித பயமும் இன்றி வட்ட சட்ட பணிகள் குழுமத்தை எந்த நேரத்திலும் நாடலாம். மாற்றுத்திறனாளிகளின் தனி மனித உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்படும் என்று கூறினார்கள். ஹோம் சிறப்புப்பள்ளி நிர்வாகத்தினர் செய்து வரும் நற்செயல்களுக்கும். சேவைகளுக்கும் நன்றிகளும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதாக தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். தொடர்ந்து குழித்துறை, ஒருங்கிணைந்த நீதிமன்ற மாவட்ட உரிமையியல் நீதிபதி மாண்புமிகு திரு. பல்கலைச் செல்வன் அவர்களும், குழித்துறை, ஒருங்கிணைந்த நீதிமன்ற குற்றவியல் நடுவர் மாண்புமிகு நீதிபதி திரு. மோசஸ் ஜெபசிங் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து வழக்குரைஞர் திரு. பால்சிங் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின பெற்றோர்களுக்கு சட்ட விழிப்புணர்வு வழங்கினார்கள். இறுதியாக ஹோம் சிறப்புப்பள்ளியின் தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் நன்றியுரை கூறினார்கள். இந்நிகழ்ச்சியை தசைப்பயிற்சியாளர் திருமதி ஜென்னிங்ஸ் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். சட்ட விழிப்புணர்வு முகாமில் சிறப்புக் குழந்தைகள், அவர்தம் பெற்றோர்கள், பணியாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்ற அலுவலகப் பணியாளர்கள் என சுமார் 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள். சிறப்பாசிரியர்களின் நாட்டுப்பண் பாடலுடன் சட்ட விழிப்புணர்வு முகாம் நிறைவு பெற்றது.

# மறைவட்ட செய்திகள்

## நாகர்கோவில் மறைவட்டம்

மலங்கரை கத்தோலிக்க திருஅவையானது, 2030 செப்டம்பர் 20-ஆம் நாளில், மறு ஒன்றிப்பின் நூற்றாண்டை கொண்டாடுகின்ற நிலையில், வருகின்ற ஏழு ஆண்டுகளில் ஆறு மைய கருத்துக்களோடு, ஆயர், குருக்கள் பெருமக்களின் வழிகாட்டுதலோடு, ஆன்மீக மழையில் நனைந்து பயணிக்க தீர்மானித்திருக்கின்றது. ஆகவே, இந்த ஆண்டு 2024 செப்டம்பர் 20 முதல், அடுத்த ஆண்டு 2025 செப்டம்பர் 19 வரை உள்ள, ஒரு வருட காலகட்டத்தை இறைவார்த்தை ஆண்டாக நாம் கொண்டாட அழைப்பு விடுக்கப்பட்டு, மறைமாநில அளவில், மறைமாவட்ட அளவில், துவக்க விழாவை நடத்தியது. அதனுடைய மறைவட்ட அளவிலான துவக்க விழாவை, நாகர்கோவில் மறைவட்டமானது, கடந்த 29.09.2024 அன்று, நாவல்காடு ஆலய வளாகத்தில் நடத்தியது. இவ்விழாவானது மறைவட்ட குருக்கள், அருட்கன்னியர்கள், இவ்வாண்டிற்கான சிறப்பு பயிற்சி பெற்றவர்கள் தலைமையில், பங்குகளில் இருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட மக்களோடு சேர்த்து நடத்தப்பட்டது.

மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜான் குமார் அவர்கள், துவக்க விழாவின் தலைமையுரை ஆற்றினார். தொடர்ந்து இறைவார்த்தையின் தியான வாசிப்பு (Lexio Divina) பயிற்சி வகுப்பானது, வருகை தந்த யாவரையும் இரண்டு குழுவாக பிரித்து நடத்தப்பட்டது. மறை வட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி வகுப்பில் பங்கேற்ற, அருட்தந்தை ரெதீஷ் ரிச்சார்ட், அருட்சகோதரி ஸ்டெபின் ரோஸ், முக்கடல் திரு. அந்தோணி சாமி ஆகியோர்கள் இந்த பயிற்சி வகுப்பை முன்னின்று நடத்தினார்கள். இறுதியில் அன்றைய நிகழ்வுகள் மதிப்பீடு செய்யப்பட்டு, அக்கூட்டமானது இனிதே நிறைவடைந்தது.

**மறைக்கல்வி கலைப் போட்டிகள் :**

அக்டோபர் மாதம் 12-ம் தேதி மறைவட்ட அளவிலான மறைக்கல்வி கலை போட்டியானது செட்டிகுளம் தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்ட மறைக்கல்வி இயக்குனர் பேரருட்தந்தை ராபர்ட் அடிகளார் அவர்களுடைய



வழிகாட்டுதலின்படி போட்டிகளானது சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. போட்டிகளின் முடிவில் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜான் குமார் அடிகளார் மற்றும் மறைவட்ட குருக்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கினர்.

## மார்த்தாண்டம் மறைவட்டம்

**இறைவார்த்தை ஆண்டு துவக்க விழா :**

அக்டோபர் மாதம் 6-ம் தேதி கிறிஸ்து அரசர் பேராலயத்தில் வைத்து மார்த்தாண்டம் மறைவட்ட இறைவார்த்தை ஆண்டு துவக்க விழா நடைபெற்றது. மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் அடிகளார் அவர்கள் தலைமை வகித்தார்கள். மறைமாவட்ட விவிலிய பணிக்குழுவின் இயக்குனர் அருட்தந்தை ஆன்றோ ஜெபின் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்து இறைவார்த்தையை தியானிக்கும் Lexio Divina முறையை பற்றி கற்பித்தார். இவ்விழாவானது அருட்தந்தை சஜின் அவர்களுடைய வழிகாட்டுதலில் சிறப்பான முறையில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தது. மறைவட்டத்தில் உள்ள அனைத்து பங்கில் இருந்தும் பங்குபேரவை உறுப்பினர்கள் மற்றும் பக்த இயக்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்.

**மறைக்கல்வி கலை போட்டிகள் :**

அக்டோபர் மாதம் 12-ஆம் தேதி மறைவட்ட அளவிலான மறைக்கல்வி கலை போட்டியானது தேமானூர் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை பென்னார்ட் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி போட்டிகளானது சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. போட்டிகளின் முடிவில் மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் அடிகளார் அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கினார்.

## அழகியமண்டபம் மறைவட்டம்

**மறைக்கல்வி கலைப் போட்டிகள் :**

அக்டோபர் மாதம் 12-ஆம் தேதி மறைவட்ட அளவிலான மறைக்கல்வி கலைப்போட்டியானது செல்லங்கோணம் பள்ளிக் கூடத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்ட மறைக்கல்வி இயக்குனர்

அருட்தந்தை வில்பின் விஜூ அடிகளார் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி போட்டிகளானது சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. போட்டிகளின் முடிவில் அருட்தந்தை அருள் ஷைஜூ மற்றும் அருட்சகோதரி லீனா மேத்யூ அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கினர்.

## குலசேகரம் மறைவட்டம்

**மறைக்கல்வி கலை போட்டிகள் :**

மறைவட்ட அளவிலான மறைக்கல்வி கலை போட்டியானது அணக்கரை பங்கில் வைத்து அக்டோபர் மாதம் 12-ம் தேதி நடைபெற்றது. மறைவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை பிபின் அடிகளார் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி போட்டிகளானது சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. போட்டிகளின் முடிவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மறைவட்ட குருக்கள் பரிசு வழங்கினர்.

**இறைவார்த்தை ஆண்டு துவக்க விழா :**

அக்டோபர் 13-ஆம் தேதி செருப்பாலூர் பங்கில் வைத்து குலசேகர மறைவட்ட விவிலிய ஆண்டு துவக்க விழா நடைபெற்றது. மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அடிகளார் அவர்கள் தலைமை வகித்தார்கள். அனைத்து பங்கில் இருந்தும் பங்குபேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

## பனச்சமூடு மறைவட்டம்

**மறைக்கல்வி கலை போட்டிகள் :**

அக்டோபர் மாதம் 11-ம் தேதி மறைவட்ட அளவிலான மறைக்கல்வி கலைப்போட்டியானது குளப்பாறை பள்ளிக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்ட மறைக்கல்வி இயக்குனர் பேரருட்தந்தை ராபின்சன் அடிகளார் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி போட்டிகளானது சிறப்பான முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. போட்டிகளின் முடிவில் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை கோர் எப்பிஸ்கோப்பா S. வர்கீஸ் அடிகளார் அவர்கள் மற்றும் மறைவட்ட குருக்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கினர்.



## களியக்காவிளை மறைவட்டம்

**இறைவார்த்தை ஆண்டு துவக்க விழா :**

அக்டோபர் மாதம் 27-ம் தேதி மரியகிரி தேவாலயத்தில் வைத்து மறைவட்ட இறைவார்த்தை ஆண்டு துவக்க விழா மற்றும் இறைவார்த்தையின் தியான வாசிப்பு (Lexio Divina) பயிற்சி வகுப்பானது நடைபெற்றது. மறைமாவட்ட விவிலிய பணிக்குழுவின் இயக்குனர் அருட்தந்தை ஜோஸ் பாறவிளை அவர்களின் வழிகாட்டுதலின்படி பயிற்சி வகுப்பானது நடத்தப்பட்டது. மறைவட்டத்தில் உள்ள அனைத்து பங்கில் இருந்தும் ஐந்து பொறுப்பாளர்கள் வீதம் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

**மறைக்கல்வி கலை போட்டிகள் :**

அக்டோபர் மாதம் 11-ம் தேதி மறைவட்ட அளவிலான மறைக்கல்வி கலை போட்டியானது மரியாகிரி தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை ஜோஸ் பாறவிளை நாகர்கோவில் மறைவட்டம் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி போட்டிகளானது சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. போட்டிகளின் முடிவில் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை. அருள்தாஸ் அடிகளார் மற்றும் மறைவட்ட குருக்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கினர்.

**கிறிஸ்து அரசர் பவனிக்கான ஆலோசனை கூட்டம் :**

கிறிஸ்து அரசர் பவனிக்கான ஆலோசனை கூட்டமானது மரியாகிரி பங்கில் வைத்து 27.10.24 அன்று நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் களியக்காவிளை மற்றும் கொல்லங்கோடு மறைவட்டங்களின் முதன்மை குருக்கள், மறைவட்டங்களின் அனைத்து குருக்கள், பங்குகளின் தலைவர்கள், செயலர்கள் மற்றும் மேய்ப்பு பணி குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை செய்தனர். ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் வருகின்ற நவம்பர் மாதம் 24-ம் தேதி கிறிஸ்து அரசர் பவனி நடத்தலாம் என்றும், பவனியானது மங்காடு தேவாலத்தில் இருந்து தொடங்கி ஆதிச்சவிளாகம் தேவாலயத்தில் நிறைவு செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

# ஆயரின் அக்டோபர் மாத நிகழ்வுகள்



- 2 ➢ பிலாங்காலையில் வைத்து கிறிஸ்தவ ஐக்கிய பேரவை சார்பாக நடைபெற்ற போதை விழிப்புணர்வு பேரணியிலும் பொதுகூட்டத்திலும் கலந்துகொண்டு உரையாற்றினார்.
- 6 ➢ புன்னமூட்டுகடையில் வைத்து நடைபெற்ற கொல்லங்கோடு மறைவட்ட அளவிலான இறைவார்த்தை ஆண்டு துவக்கவிழாவில் கலந்துகொண்டு இறைவார்த்தை ஆண்டை துவங்கி வைத்து ஆசீர் அளித்தார்.
- ➢ புஷ்பகிரி தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.
- 7 ➢ பத்தனம்திட்டையில் வைத்து நடைபெற்ற பேரருட்தந்தை ஸ்கறியா கொச்சுமுருப்பேல் நினைவு திருப்பலியில் கலந்து கொண்டார்.



- 8 ➢ குருக்களுக்கான மாதாந்திர தியானத்தில் கலந்துகொண்டு ஆசீர் அளித்தார்.
- 10 ➢ திருவனந்தபுரம் பட்டம் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையின் நினைவு திருப்பலியிலும் தூபமன்றாட்டிலும் கலந்துகொண்டார்.
- 11 ➢ வேலாம்பூர் - விருதுநகரில் பங்குதந்தை இல்லத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- 11-13 ➢ திருச்சி அருங்கொடை தியான இல்லத்தில் 3 நாள் நற்செய்தி பெருவிழாவை வழிநடத்தினார்.
- 14 ➢ மார்த்தாண்டம் மாகாண இல்லத்தில் வைத்து மாகாண தலைவி அவர்களின் நாமவிழா திருப்பலியிலும் கொண்டாட்டத்திலும் கலந்துகொண்டார்.
- ➢ நாகர்கோவிலில் நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவையின் செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டார்.
- 17 ➢ மறைமாவட்ட Finance Council கூட்டத்தில் கலந்து கொண்டார்.
- ➢ சூசைபுரத்தில் திருமுழுக்கு கொண்டாட்டத்தை தலைமையேற்று நடத்தினார்.
- 20 ➢ நல்லநாதபுரம் மறைபரப்பு தளத்தில் புது குருக்கள் இல்லத்தை அர்ச்சித்து வழங்கினார்.
- ➢ நல்லநாதபுரம் மறைபரப்பு தளத்தில் புது ஆலயத்திற்காக அடிக்கல் நாட்டினார். பின் திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.
- 22 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்கள் மன்ற கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

22 ➢ மார்த்தாண்டம் மக்கள் வளர்ச்சி நிதி லிமிடெட் ஆலோசனை குழு கூட்டத்தில் தலைமை தாங்கினார்.

24 ➢ மார்த்தாண்டம் MJKMS பள்ளிக்கூட ஆண்டுவிழாவில் தலைமையுரை ஆற்றி சிறப்பித்தார்.

25 ➢ ஆதிச்சவிளாகம் தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

26 ➢ MIDS அலுவலகத்தில் கோல்பிங் தின கொண்டாட்டத்தில் தலைமை வகித்தார்.

27 ➢ கொல்கத்தாவில் புனித யூதா ததேயு மலங்கரை கத்தோலிக்க தேவாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

28-30 ➢ நாலாஞ்சிறை உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு தூயஆவியியல் வகுப்பு நடத்தினார்.

31 ➢ சங்கனாசேரியில் ஆயர் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டார்.




## இம்மாதம் நினைவு கூர

நவம்பர் 2024


1 – அனைத்து புனிதர்கள்
3 – கூதோஸ் ஈத்தோ ஞாயிறு (சபையின் புனிதமாக்கம்)
திருவழிபாட்டு ஆண்டு தொடக்கம்
பாசுரமாலையின் சுபஹோ ஒன்றாம் கோலோ இன்று ஆரம்பமாகும்,
பவுலோஸ் மார் பீலக்ஸினோஸ் ஆண்டகையின் நினைவு
நிசியா நகரத்து 318 தந்தையர்கள்


10

7 – மிலித்தீன் நகரத்து 33 இரத்தசாட்சிகள்
8 – அனைத்து தூதர்கள்
9 – புனித தெயதோர்
10 – ஹூதோஸ் ஈத்தோ ஞாயிறு
இறைவாக்கினர் சாமுவேல், திருத்தந்தை புனித லியோ


10

12 – அலெக்ஸாந்திரியாவின் மார் யோவான்
13 – புனித தங்கநாவு யோவான்
யுஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகையின் பெயர்விழா
14 – திருத்தூதர் பிலிப்பு
15 – புனித ஆல்பர்ட்
16 – திருத்தூதர் மத்தேயு


24

17 – சக்கரியாவுடனான அறிவிப்பு
21 – தூய இறையன்னையின் தேவாலய நுழைவு
22 – மார் பிலமோன், புனித சிசிலியா
23 – திருத்தந்தை புனித க்ளெமெண்ட், புனித பெலிஸிற்றா
புனே கட்கி தூய எப்ரேம் மறைமாவட்ட உதயம் (2019)
24 – தூய இறை அன்னைக்கு அறிவிப்பு
கிறிஸ்து அரசர் திருநாள் (லத்தீன் முறை)


30

28 – புனித கத்தரீனா
29 – சாறூகியரான மார் யாக்கோபு
30 – திருத்தூதர் அந்திரேயா

## மறைபரப்புத் தளங்கள்







## மறைக்கல்வி கலைப்போட்டிகள்



## DM Convent




## MCA



## மறைவட்ட இறைவார்த்தை ஆண்டு துவக்கவிழா



## MCYM



## MCYM தேவதானபெட்டி



## தாய்மார் சங்கம், தேவதானபெட்டி



## MIDS



## HOM School



## HOM

